வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P .1632

# ஈழநாடு

Eelanadu

விலை ரூ. 30/=


மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4433
MoneyGram. மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER ரியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

Email : eelanaduweekly@gmail.com | மலர் : 07 | 23.12.2025 செவ்வாய்க்கிழமை | இதழ் : 357 | பக்கங்கள் : 08

## வடக்கு ரயில் சேவைகள் நாளை முதல் வழமைக்கு

கொழும்பு, டிசெ. 23

வடக்கு ரயில்வே வழித்தடம் முழுமையாக ரயில் சேவைகளுக்காக மீண்டும் திறக்கப்பட்டுள்ளதாக இலங்கை ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது.

ரயில்வே திணைக்களத்தின் தகவலின்படி, பிரபலமான 'யாழ் தேவி' ரயில் சேவை நாளை முதல் கொழும்பு கோட்டை மற்றும் காங்கேசன்துறை இடையே வடக்கு ரயில்வே வழித்தடத்தில் மீண்டும் இயக்கப்பட உள்ளது.

மேலும், 'யாழ் தேவி' ரயில் சேவை

07

## டித்வா புயலால் இலங்கைக்கு 4.1 பில்லியன் டொலர் இழப்பு!

### உலக வங்கி மதிப்பீடு

கொழும்பு, டிசெ. 23

இலங்கையை அண்மையில் தாக்கிய "டித்வா" சூறாவளி காரணமாக, கட்டடங்கள், விவசாயம் மற்றும் அத்தியாவசிய உட்கட்டமைப்பு வசதிகளுக்கு சுமார் 4.1 பில்லியன் அமெரிக்க டொலர் நேரடிப் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக உலக வங்கி மதிப்பீடு செய்துள்ளது.

இந்த சூறாவளியினால் வீடுகள், வணிகக் கட்டடங்கள்

07

# ஜெய்சங்கர் நேற்றிரவு கொழும்பு வந்தடைந்தார்

## இன்று ஜனாதிபதி, தமிழ் கட்சிகளுடன் பேச்சு!

கொழும்பு, டிசெம்பர் 23

கொழும்புக்கு நேற்றிரவு வருகை தந்த இந்திய வெளி விவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கர், இன்றைய தினம் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவை சந்திக்கிறார். அத்துடன், தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகளையும் அவர் சந்தித்து பேச்சு நடத்துவார்.

புயல், வெள்ளம், மண்சரிவு போன்ற பேரிடர்களில் சிக்கி அல்லாடும் இலங்கையை அந்த நெருக்கடியில் இருந்து மீட்டெடுக்கும் பேருதவித் திட்டம் ஒன்றை இந்தியா வழங்குவதற்கு முன்வந்திருக்கும் பின்னணியில் இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் இந்தியாவின் பேருதவி திட்டத்தை கொழும்பில் வைத்து அறிவிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.



நெருக்கடியில் சிக்கிக் கொண்டிருக்கும் இலங்கையைப் பேரிடரின் பின் மீட்பதற்கான பெரும் உதவித் திட்டம் ஒன்றை

07

## மண்டைதீவு சர்வதேச கிரிக்கெட் மைதான திட்டம் சட்டவிரோதம்!

### ஜனாதிபதியிடம் முறைப்பாடு

கொழும்பு, டிசெ. 23

யாழ்ப்பாணம் மண்டைதீவில் முன்மொழியப்பட்டுள்ள சர்வதேச கிரிக்கெட் மைதானம் மற்றும் விளையாட்டு வளாகத் திட்டம் சட்டவிரோதமானது எனவும், இது அத்தீவின் சூழலியல் மற்றும் உள்ளூர் சமூகங்களுக்குப் பாரிய அச்சுறுத்தலை ஏற்படுத்தும் எனவும் இலங்கை வனவிலங்கு மற்றும் இயற்கை பாதுகாப்பு சங்கம் எச்சரித்துள்ளது.

07

## புதிய பயங்கரவாத சட்டத்தால் ஜனநாயகத்துக்கு அச்சுறுத்தல்

### உழைக்கும் ஊடகவியலாளர் சங்கம்

கொழும்பு, டிசெ. 23

புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்துக்கு இலங்கை உழைக்கும் ஊடகவியலாளர் சங்கம் கடுமையான எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

இது ஜனநாயகத்துக்கும் அடிப்படை மனித உரிமைகளுக்கும் கடுமையான அச்சுறுத்தலாக உள்ளது என அது குறிப்பிட்டுள்ளது.

07

## எம்.பியை தாக்கிய குற்றச்சாட்டு; பொலிஸ் உத்தியோகத்தர் கைது!

கொழும்பு, டிசெ. 23

தேசிய மக்கள் சக்தியின் இரத்தினபுரி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாந்த பத்மகுமாரவை தாக்கினார் என்ற குற்றச்சாட்டில் சூரியகந்தை பொலிஸ் நிலைய பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் ஷாந்த பத்மகுமார தன் முகத்தில் கசிப்பு அடங்கிய பைக்கெற்றினால் தாக்கினார் என ஏற்கனவே மேற்படி பொலிஸ் உத்தியோகத்தர் குறிப்பிட்ட நிலையில் இந்த

07

## ஐக்கிய மக்கள் சக்தி - ஐ. தே. க. ஒன்றிணைவது ஆரோக்கியமானது

### நாமல் ராஜபக்ஷ கூறுகிறார்

கொழும்பு, டிசெ. 23

ஐக்கிய தேசிய கட்சியும் ஐக்கிய மக்கள் சக்தியும் ஒன்றிணைவது ஜனநாயகத்துக்கு ஆரோக்கியமானது என பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

07

## சுவிற்சர்லாந்து தேசிய பேரவையின் உபதலைவராக இலங்கை வம்சாவளி

பேர்ண், டிசெ. 23



இலங்கை வம்சாவளியை சேர்ந்தவரான பராரூமி, சுவிற்சர்லாந்து தேசிய பேரவையின் இரண்டாவது துணைத் தலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

1991 டிசெம்பர் 28ஆம் திகதி கொழும்பில் பிறந்த ரூமி, தனது 6ஆவது வயதில்

07

## புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தில் பயங்கரவாதத்துக்கு வரையறை இல்லை

### சுட்டிக்காட்டுகிறார் சரத் வீரசேகர

கொழும்பு, டிசெ. 23

புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தில் பயங்கரவாதம் வரையறுக்கப்படவில்லை என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தைக் கொண்டு வந்ததற்காக நீதியமைச்சருக்கு நன்றி தெரிவிக்கிறோம். இதனை மக்கள் கருத்துக்காகத்



திறப்பதாக அவர் கூறியுள்ளார். எமது ஆலோசனைகளையும் முன்மொழிவு

07

## "விகாரைக்கு தேவையான காணியை தவிர்த்து மிகுதியை தமிழ் மக்களுக்கு வழங்குவதே தீர்வு"

கொழும்பு, டிசெ. 23

விட்டுக் கொடுப்பது பௌத்த தர்மமாகும். திஸ்ஸ விகாரைக்கு தேவையான காணியை வைத்துக் கொண்டு மிகுதி காணியை கோருபவர்களுக்கு, தமிழ் மக்களுக்கு வழங்கி பிரச்னைக்கு தீர்வு காண்பது சிறந்ததாக அமையும் என்று திஸ்ஸ ரஜமஹா விகாரையின் விகாராதிபதி கிந்தொட்ட நந்தாராம தேரர் குறிப்பிட்டார்.

தையிட்டி திஸ்ஸ ரஜமஹா விகாரையின் விகாராதிபதி கிந்தொட்ட நந்தாராம தேரருக்கு அமரபுர சிறீ கல்யாண வங்ச நிகாய உத்தரலங்கா உப பிரதான சங்க நாயக்க பதவி நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் வைத்து வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ உட்படப் பலர் கலந்துக்கொண்டனர்.

இந்நிகழ்வில் உரையாற்றிய தையிட்டி திஸ்ஸ

07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தையிட்டி விகாரைக்கு எதிராக நேற்று யாழ். பல்கலை மாணவர் போராட்டம்!

யாழ்ப்பாணம், டிசெ. 23

தையிட்டி விகாரை அமைக் கப்பட்டதை எதிர்த்து யாழ்ப் பாண பல்கலைக்கழக மாண வர்கள் பல்கலைக்கழகத்துக்கு முன்பாக நேற்று போராட்டத் தில் ஈடுபட்டனர்.

"தையிட்டி எங்கள் சொத்து - எங்கள் காணிகளை அபகரிக் காதே" முதலான கோஷங்களை எழுப்பிய மாணவர்கள், விகா ரையை அகற்றுமாறு போராட் டத்தின்போது கோரிக்கை விடுத்தனர்.

அத்துடன் தையிட்டியில் நேற்று முன்தினம் போராட் டத்தில் ஈடுபட்டவர்களுடன்



பொலிஸார் காட்டுமிராண்டித் தனமாக செயல்பட்டமை மற்றும் அமைதி வழிப் போராட்டத்தில் ஈடுபட்டவர் களைக் கைது செய்தமை முத லிய செயல்களுக்கு மாணவர் கள் கண்டனம் தெரிவித்தனர். (அ)

# வடமராட்சி கிழக்கு போக்குவரத்து ஜனவரி மாத இறுதிக்குள் சீராகும்

## இ.போ.சபை தலைவர் கருத்து

யாழ்ப்பாணம், டிசெ. 23

எதிர்வரும் ஆண்டு ஜனவரி மாத இறுதிக்குள் வடமராட்சி கிழக்குக்கான போக்குவரத்துக் கள் சீராகும் என இலங்கை போக்குவரத்து சபைத் தலைவர் சஜீவ நந்தன தெரிவித்துள்ளார்.

இலங்கை போக்குவரத்துச் சபை தலைவர் சஜீவ நந்தன மற்றும் பருத்தித்துறை பிரதேச சபை உறுப்பினர் புலோலியூர் ரமணனுக்கிடையில் பருத்தித் துறை சாலையில் இடம்பெற்ற சந்திப்பின்போதே இலங்கை போக்குவரத்து சபைத் தலைவர் இவ்வாறு தெரிவித்தார்.

எதிர்வரும் ஜனவரி மாத இறுதிக்குள் இலங்கை போக்கு வரத்துச் சபையில் காணப்படும் ஆளணிகள் நிரப்பப்பட்ட வுள்ளதாகவும் இதனால் மேலதிகமாக பல சேவைகள் இடம்பெறும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

சாரதி மற்றும் நடத்துநர் இல்லாது பல சேவைகள் இடைநிறுத்தப்பட்டதாகவும் அவையும் மீள இயங்க தொடங்கும் எனவும் அவர் தெரிவித்தார்.

இச்சந்திப்பில் பருத்தித் துறை சாலை பதில் முகாமை யாளர், சாலை பணியாளர்கள், மற்றும் உயர் அதிகாரிகள் கலந்துகொண்டனர். (அ)


# சத்தியக்காட்டு சந்தையில் கடைத் தொகுதிக்கு அடிக்கல்!

யாழ்ப்பாணம், டிசெ. 23

சத்தியக்காட்டு சந்தையில் கடைத் தொகுதியை அமைப் பதற்கான அடிக்கல் நாட்டும் வைபவம் நேற்று வலி. மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் சண்முகநாதன் ஜெயந்தன் தலைமையில் நடைபெற்றது.

செயல்திறன் அடிப்படை யிலான மூலதன மானியங்களை வழங்குதல் திட்டத்தின்கீழ், சத்தியக்காடு சந்தையில் வாழ் வாதார உதிவியை மேம்படுத் தும் நோக்கில் இந்த கட்டடத் தொகுதி அமைக்கப்படவுள்ளது.

இந்த நிகழ்வில் வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் தவி சாளர் சண்முகநாதன் ஜெயந் தன், செயலாளர் பாலரூபன், பிரதேச சபையின் உறுப்பினர் கள், பிரதேச சபையின் உத்தி யோகத்தர்கள் மற்றும் பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டனர். (அ-05)



# மண்சரிவு எச்சரிக்கை

கண்டி, டிசெ. 23

நாட்டின் பல பகுதிகளில் தொடர்ந்து பெய்து வரும் கன மழை காரணமாக, கண்டி மற் றும் நுவரெலியா மாவட்டங் களில் உள்ள ஏழு பிரதேச செய லக பிரிவுகளுக்கு மூன்றாவது நிலை சிவப்பு மண்சரிவு எச்ச ரிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் 6 மாவட்டங்களின் 15 பிரதேச செயலக பிரிவுக ளுக்கு இரண் டாவது நிலை எச்சரிக்கையை யும், 35 பிரதேச செயலக பிரிவு களுக்கு முதல் நிலை எச்சரிக் கையையும் வெளியிட்டுள்ளது.

இதன்படி, கண்டியில் மினிபே உடதும் பர மற்றும் மெததும்பர பிரதேச செயலக பிரிவுகளுக் கும், நுவரெலியா மாவட்டத் தில் மதுரட்ட, நில்தந்தஹின், ஹங் குரன்கெத்த மற்றும் வலப் பனே ஆகிய 7 பிரதேச செயலக பிரிவுகளுக்கும் 3ஆவது நிலை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பதுளையில் லுணுகல, மீகஹ கிவுல, பசறை கந்தகெட்டிய, சொரணத்தொட்ட, ஹாலி எல மற்றும் பதுளை பிரதேச செய லக பிரிவுகளுக்கு 2ஆவது நிலை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# வவுனியாவில் நேற்று இடம்பெற்றது கிளீன் சிறி லங்கா நடமாடும் சேவை


வவுனியா, டிசெ. 23

கிளீன் சிறி லங்கா வேலைத் திட்டத்தின் கீழான விசேட நட மாடும் சேவை வவுனியா மாவட்ட செயலக வளாகத்தில் நேற்று இடம்பெற்றுள்ளது.

மாவட்ட செயலகம், வவு னியா பிரதேச செயலகம், தெற்கு பிரதேச செயலகம் ஆகியன இணைந்து குறித்த வேலைத் திட்டத்தை முன்னெடுத்திருந் தன. இந்த நடமாடும் சேவை யில் காணி அனுமதிப்பத்திரம் வழங்கிவைத்தல்,காலம் கடந்த பிறப்பு, இறப்பு பதிவு, மனிதவள அபிவிருத்தி தொடர்பான சேவைகள், ஜனாதிபதி செயல கத்தின் பன்முகப்படுத்தப்பட்ட சேவைகள், ஆட்பதிவு திணைக் களத்தின் சேவைகள்,போதை ஒழிப்பு, ஊழல் ஒழிப்பு உட்பட பொதுமக்களுக்கான பல்வேறு சேவைகள் முன்னெடுக்கப்பட் டன.

நிகழ்வில் முதன்மை அதிதி யாக கலந்துகொண்ட கூட்டு றவு பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க உத்தியோகபூர்வமாக நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

இந்த நிகழ்வில் மாவட்ட அரசாங்க அதிபர் பி. ஏ. சரத் சந்திர,மேலதிக அரச அதிபர் நா.கமலதாசன், பிரதேச செய லாளர் இ.பிரதாபன் உட்பட திணைக்களங்களின் தலைவர் கள், உத்தியோகத்தர்கள் மற் றும் பெருமளவான பொதுமக் கள் கலந்து கொண்டிருந்தனர்.



# கிரவல் அகழ்வுக்கு எதிராக நேற்று கங்கன்குள மக்கள் ஆர்ப்பாட்டம்!



வவுனியா, டிசெ. 23

வவுனியா செட்டிகுளம் பிர தேச செயலாளர் பிரிவிற்குட் பட்ட கங்கன்குளம் பகுதியில் கிரவல் அகழ்வதை தடை செய் யக் கோரி நேற்று பொதுமக் களால் ஆர்பாட்டப் பேரணி ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

கங்கன்குளம் பகுதியில் போராட்டத்தை ஆரம்பித்த மக்கள் அங்கிருந்து 3 கிலோ மீற்றர் தொலைவில் அமைந் துள்ள செட்டிகுளம் பிரதேச செயலகம் வரை பேரணியாக சென்று அங்கு ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

இதன்போது கருத்து தெரி வித்த அவர்கள்-

கிரவல் அகழ்வால் எமது கிராமமே குன்றும் குழியுமாக உள்ளது. எனவே கிராம மக்களின் விருப்பத்துக்கு மாறாக கிரவல் அகழ்வுக்கான அனுமதியை வழங்குவதை அதி காரிகள் உடனடியாக நிறுத்த வேண்டும். அத்துடன் சுற்றுச் சூழலையும் வளங்களையும் அழித்து அதற்கு எதிராக குரல் எழுப்பும் மக்களின் மீது அடக் குமுறைகளை பிரயோகிக்க வேண்டாம்-என்றனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட வர்கள் இயற்கையை அழிக்கா தீர்கள்,சட்டவிரோத கிரவல் அகழ்வுக்கு தடை விதியுங்கள், எமது கிராமத்தின் வளங்கள் சுரண்டலுக்கு மாத்திரமா போன்ற வாசகங்கள் தாங்கிய பதாதைகளை ஏந்தியிருந்தது டன் கோஷங்களை எழுப்பினர்.

# 100 மாணவர்களுக்கான தலைமைத்துவ பயிற்சி

யாழ்ப்பாணம், டிசெ. 23

வடராட்சி கல்வி வலயத் தால் ஏற்பாடு செய்யப்படும் தூய்மையான இலங்கை திட் டத்தின் கீழான அடுத்த தலை முறை தலைவர்கள் எனும் 100 மாணவர்களுக்கான தலைமைத் துவ மேம்பாட்டுத் திட்டம் நேற்று திங்கட்கிழமை காலை 9.00 மணியளவில் நெல்லியடி மத்திய கல்லூரியில் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கனகசபை சத்தியபாலன் தலைமையில் ஆரம்பமானது.

இதில் முதல் நிகழ்வாக விருந்தினர்கள் வீதியிலிருந்து பண்பாட்டு வரவேற்பு, மற்றும் பாண்ட் வாத்திய இசை முழங்க அழைத்துவரப்பட்டு தேசியக் கொடி, வலய கொடி என்பன ஏற்றப்பட்டு மங்கல சுடர்கள் ஏற்றப்பட்டு நிகழ்வுகள் ஆரம் பமாகின.

தொடர்ந்து வரவேற்பு நட னம், வரவேற்புரை என்பன இடம்பெற்று தொடர்ந்து பல்வேறு நிகழ்வுகளும் இடம் பெற்றன.

இலங்கையின் பிரபல கராத்தே ஆசிரியரும் யோகா ஆசிரியருமான இரட்ணசோதி தலைமையில் யோகாசன பயிற் சியும் இடம்பெற்றது.

இதில், பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கல்வி பண் பாட்டலுவல்கள் விளையாட் டுத்துறை அமைச்சின் செயலா ளர் எம். பற்றிக் டிறஞ்சன், சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் ஜெயச்சந்திரன், மருதங்கேணி கோட்ட கல்விப் பணிப்பாளர் சிறீ ராமசந்திரன் மற்றும் வட மராட்சி வலய கல்வி பணி மனை அதிகாரிகள், நெல்லியடி மத்திய கல்லூரி அதிபர், ஆசிரி யர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (அ)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
23.12.2025 செவ்வாய்க்கிழமை
விசுவாவசு வருடம், மார்கழி 08

**"அஞ்சுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம் உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

## ஒன்றை பற்றி கேள்வி கேட்பதற்கு முன்னர்...!

புதிய கணக்காய்வாளர் நாயகமாக இராணுவ அதிகாரி ஒருவரை நியமிக்கும் ஜனாதிபதியின் பரிந்துரையை அரசமைப்புப் பேரவை நிராகரித்திருக்கிறது. அரசமைப்புப் பேரவையின் உறுப்பினரான பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் அரசாங்கத்தின் தீர்மானத்தை ஆதரித்ததாக ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரான சிறீதரனின் குறித்த முடிவு தொடர்பாக இலங்கைத் தமிழ் அரசுக் கட்சிதான் பதிலளிக்க வேண்டும். கட்சியின் அனுமதியின்றியா அவ்வாறான தீர்மானத்தை அவர் மேற்கொண்டார்?

இலங்கையில் இராணுவ அதிகாரிகளை சிவிலியன் பணிகளில் அமர்த்துவது ஆச்சரியமான விடயமல்ல - அனைத்து அரசாங்கங்களும் செய்த விடயம்தான். இவ்வாறான நியமனங்களின்போது ஒரு சில தமிழ் அரசியல்வாதிகளை தவிர, வேறு எந்தவொரு சிங்கள அரசியல் தலைவர்களும் அதனை எதிர்ப்பதில்லை.அரசாங்கத்தை விமர்சிக்கும் எதிரணி அரசியல்வாதிகள்கூட, இந்த விடயத்தில் அரசாங்கத்தை விமர்சிப்பதில்லை. ஆனால், ஒரு விடயத்தையும் கவனிக்கவேண்டும். அதாவது, அரசாங்கம் இவ்வாறான தீர்மானத்தை மேற்கொண்டபோதும் அரசமைப்புப் பேரவையில் ஜனாதிபதி தனது மறைமுக செல்வாக்கைப் பிரயோகிக்கவில்லை.

இராணுவ அதிகாரிகளை இவ்வாறான பதவிகளுக்கு அரசாங்கம் நியமிப்பது விமர்சனத்துக்குரிய விடயமாக இருக்கலாம். ஆனால், இதனைத் தமிழர் தரப்புகள் விமர்சிப்பது எந்தவகையில் அரசியல் அறம்சார்ந்த விடயம் என்று ஒரு கேள்வியுமுண்டு. ஜனாதிபதித் தேர்தலின்போதும் பின்னர் பாராளுமன்றத் தேர்தலின்போதும் ஜே. வி. பி.மீது முன்வைக்கப்பட்ட முக்கிய குற்றச்சாட்டு, அவர்கள் இறுதி யுத்தத்தின்போது இராணுவத்திற்கான ஆட்சேர்ப்பில் ஈடுபட்டவர்கள், யுத்தத்தை ஆதரித்தவர்கள் எனவே, அவர்களுக்கு வாக்களிக்க வேண்டாம் என்பதே தமிழ்த் தேசிய கட்சியினரின் வாதமாக இருந்தது.

தமிழ் கட்சிகளின் கீழ்மட்ட உறுப்பினர்கள் கிராமம் கிராமமாக இவ்வாறான பிரசாரங்களை மேற்கொண்டபோது, மேல் மட்டத்திலுள்ளவர்கள் அமைதியாக அதனை ரசித்துக் கொண்டிருந்தனர். மறைமுகமாக ஊக்குவித்தனர். ஆனால், கேள்வி - இந்த அடிப்படையில் பேசுவதற்கு தமிழ் கட்சிகளுக்குத் தகுதியுண்டா?

ஏனெனில், 2010 ஜனாதிபதித் தேர்தலின்போது இறுதி யுத்தத்தை வழிநடத்திய இராணுவத் தளபதியை ஜனாபதியாக்குவதற்காக தமிழ் மக்களை வாக்களிக்குமாறு கூறியது யார்? - சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு. இறுதி யுத்தத்தை வழிநடத்திய இராணுவத் தளபதிக்கு வாக்களிக்குமாறு கூறிவிட்டு, அதனைக் கேட்டுத் தமிழ் மக்களும் வாக்களித்துவிட்டு, ஜே. வி. பியின் யுத்த ஆதரவு பற்றிப் பேசுவதில் ஏதாவது நியாயமுண்டா?

இதேபோன்று, கொழும்பு சிவில் சமூகக் குழுக்களும் மனித உரிமைவாதிகள் என்போரும் இராணுவத் தளபதி பொன்சேகாவை ஆதரித்தனர் என்பதும் வரலாறு. மகிந்த ராஜபக்ஷவா அல்லது பொன்சேகவா என்னும்போது, பொன்சேகா திடீரென்று புனிதரானார். இவ்வளவுதான் தமிழர் அரசியல் அறிவுநிலை என்றால், இராணுவ அதிகாரிகளை சிவிலியன் பதவிகளில் நியமிக்கும்போது, அது பற்றிக் கேள்வி கேட்கும் தகுதிநிலையும் தமிழர் தரப்புகளுக்கு இல்லாமல் போகிறது. ஒன்று பற்றி பேசுவதற்கு முன்னர், அது பற்றிப் பேசுவதற்கான தகுதி தொடர்பில் ஒன்றுக்கு இரண்டு முறை யோசிக்க வேண்டும்.

## ஜனவரி முதல் தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பு நடைமுறைக்கு!

கொழும்பு, டிசெ. 23

இயற்கை அனர்த்தங்களால் தேயிலை தொழிற்துறைக்கு ஏற்பட்ட பாதிப்புக்கள் குறித்த மதிப்பீட்டுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. எனினும், அந்த பாதிப்புக்கள் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள விவகாரத்தில் தாக்கம் செலுத்தாது. வழங்கப்பட்ட வாக்குறுதிக்கமைய ஜனவரி முதல் சம்பள அதிகரிப்பு நடைமுறைப்படுத்தப்படும் என பெருந்தோட்ட, சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர் சமந்த வித்தியாரத்ன தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், உள்நாட்டு சந்தையில் தேயிலை விலையில் எவ்வித அதிகரிப்பும் இல்லை. எனினும், பெருந்தோட்டப் பகுதிகளில் பெய்த கடும் மழையால் சில தினங்களுக்கு தேயிலை பறிக்க முடியாத நிலைமை காணப் பட்டது. தற்போது மக்கள் இயல்பு நிலைக்கு திரும்பியுள்ளதால், தேயிலை தொழிற்துறையும் வழமை போன்று இயங்குகிறது. அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட தொழிற்சாலைகளை இயல்பு நிலைக்கு கொண்டு வருவதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது - என்றார். (அ)

## வாகன இறக்குமதியில் வெளிப்படைத்தன்மை

கொழும்பு, டிசெ. 23

இலங்கையில் வாகன இறக்குமதியின்போது இடம்பெறும் பாரிய வரி ஏய்ப்பு மற்றும் தரவு மோசடிகளைத் தடுப்பதற்காக, சுங்கத் திணைக்களம் மற்றும் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் ஆகியவற்றுக்கிடையே புதிய டிஜிற்றல் இணைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

சுங்கத் திணைக்களத்தின் மென்பொருள் மூலம் வாகனத்தின் இயந்திர இலக்கம், உற்பத்தி ஆண்டு மற்றும் செலுத்தப்பட்ட வரி விவரங்கள் நேரடியாக மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்துக்கு டிஜிற்றல் முறையில் அனுப்பப்படும்.

கோபா குழு நடத்திய விசாரணையில், இரு திணைக்களங்களுக்கும் இடையே முறையான கணினி இணைப்பு இல்லாததால், வாகனத்தின் உற்பத்தி ஆண்டு, இயந்திரத் திறன் மற்றும் உற்பத்தி நாடு போன்ற தரவுகள் மாற்றப்பட்டு மோசடிகள் இடம்பெற்றிருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

குறித்த நேரடித் தரவுப் பரிமாற்றத்தின் மூலம் வாகனங்களின் இயந்திரத் திறனைக் குறைத்துக் காட்டி வரி ஏய்ப்புச் செய்வது மற்றும் உற்பத்தி ஆண்டை மாற்றிப் பதிவு செய்வது போன்ற மோசடிகள் இனி சாத்தியப்படாது என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## சீனாவுக்கு மாணிக்கக்கல் கடத்தியோர் கைது

கொழும்பு, டிசெ. 23

பெருமளவான மாணிக்கக்கற்களை ஆசனவாயில் மற்றும் பயணப் பொதியில் மறைத்து சீனாவுக்கு கொண்டு செல்ல முயன்ற இலங்கையர் இருவர் கட்டுநாயக்க விமான நிலைய சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் இருவரும் பேருவளை பிரதேசத்தைச் சேர்ந்த 38 மற்றும் 39 வயதுடைய மாணிக்கக்கல் வர்த்தகர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சந்தேக நபர்கள் இருவரும் நேற்று முன்தினம் இரவு கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டனர்.

அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட மாணிக்கக் கற்களின் பெறுமதி சுமார் 3 கோடியே 20 இலட்சம்ரூபாய் என்று கூறப்பட்டது.

## பொலிஸுக்கு 75,000 சுவாச பகுப்பாய்வு கருவிகள்



கொழும்பு, டிசெ. 23

இலங்கை பொலிஸாருக்கு 75,000 புதிய சுவாசப் பகுப்பாய்வு கருவிகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும், அவை தற்போது நாடு முழுவதும் உள்ள அனைத்து பொலிஸ் பிரிவுகளுக்கும் விநியோகிக்கப்பட்டு வருவதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் உதவி பொலிஸ் அத்தியட்சகருமான எவ்.யு. வூட்லர் தெரிவித்துள்ளார்.


தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் அசோக ரன்வல சம்பந்தப்பட்ட வீதி விபத்து விசாரணையில் முறையான நடைமுறைகள் பின்பற்றப்படவில்லை என எழுந்த விமர்சனங்களுக்கு மத்தியில் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

கடந்த காலங்களில் நிலவிய சுவாசப் பகுப்பாய்வு கருவிகளுக்கான தட்டுப்பாடு இந்த புதிய தொகுதியின் மூலம் நீங்கும் என அவர் குறிப்பிட்டார்.


மேலும் பண்டிகைக் காலத்தை முன்னிட்டு வீதிச் சோதனைகள் மற்றும் விபத்து நடந்த இடங்களிலேயே உடனடி சோதனைகளை முன்னெடுக்க இது உதவும் என்றும் அவர் கூறினார்.

அத்துடன் "கருவிகள் இல்லாத சமயங்களில் சட்டம் நடைமுறைப்படுத்தப் படாது என்று அர்த்தமல்ல. அத்தகைய சந்தர்ப்பங்களில் சந்தேகநபர்கள் சட்ட மருத்துவ அதிகாரி ஒருவரிடம் முன்னிலைப்படுத்தப்படுவார்கள். அங்கு பெறப்படும் மருத் துவ அறிக்கையே நீதிமன்றத்தில் சாட்சியாகப் பயன்படுத் தப்படும்" என்று தெரிவித்துள்ளார். (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
கணவன்-மனைவிக்குள் இருந்த மனப்போர் நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். தள்ளிப்போன விஷயங்கள் உடனே முடியும். உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவிகள் தக்க சமயத்தில் கிடைக்கும்.

**இடபம்**
சந்திராஷ்டமம் நீடிப்பதால் சந்தேகப்படுவதை முதலில் நிறுத்துங்கள். குடும்பத்தில் உள்ளவர்கள் யாரும் தன்னைப் புரிந்துக் கொள்ளவில்லை என ஆதங்கப்படுவீர்கள்.

**மிதுனம்**
கடினமான காரியத்தையும் எளிதாக முடிப்பீர்கள். சகோதர வகையில் ஒற்றுமை பிறக்கும். தாய் வழியில் மதிப்புக் கூடும். வியாபாரத்தில் புது வேலையாட்கள் அமைவார்கள். சாதிக்கும் நாள்.

**கடகம்**
எதிர்பாராத பணவரவு உண்டு. பழைய உறவினர் நண்பர்களை சந்தித்து மகிழ்வீர்கள். அரசால் அனுகூலம் உண்டு. வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும். பிரபலங்களால் ஆதாயமடைவீர்கள்.

**சிம்மம்**
குடும்பத்தில் உங்கள் கை ஓங்கும். சிக்கனமாக செலவழித்து சேமிக்கத் தொடங்குவீர்கள். அக்கம்-பக்கம் வீட்டாரின் அன்புத் தொல்லை குறையும். வேற்றுமதத்தவர் உதவுவார்.

**கன்னி**
தடைகளை கண்டு தளரமாட்டீர்கள். அரசு அதிகாரிகளின் உதவியால் சில காரியங்களை முடிப்பீர்கள். தாயாருடன் வீண் விவாதம் வந்து போகும். புது வேலை அமையும். போராடி வெல்லும் நாள்.

**துலாம்**
உங்கள் பேச்சில் அனுபவ அறிவு வெளிப்படும். உடன்பிறந்தவர்கள் உங்களுக்கு ஒத்தாசையாக இருப்பார்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்களின் நட்பு கிடைக்கும். நினைத்தது நிறைவேறும் நாள்.

**விருச்சிகம்**
இதுவரை இருந்த அலைச்சல், டென்ஷன் கோபம் யாவும் நீங்கி ஒரு தெளிவு பிறக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி தங்கும். பணப்புழக்கம் கணிசமாக உயரும். தோற்றப் பொலிவு கூடும்.

**தனுசு**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சில வேலைகளை நீங்களே முன்னின்று முடிப்பது நல்லது. அடுத்தவர்கள் மனசு காயப்படும் படி பேசாதீர்கள். தர்ம சங்கடமான சூழ்நிலைகளை சமாளிக்க வேண்டிய நாள்.

**மகரம்**
திட்டமிட்ட காரியங்களைச் செய்து முடிப்பீர்கள். பிள்ளைகள் பிடிவாதமாக இருப்பார்கள். யாரிடமும் உணர்ச்சிவசப்பட்டு பேசாதீர்கள். வழக்கில் அலட்சியம் வேண்டாம். கவனம் தேவைப்படும் நாள்.

**கும்பம்**
எதிலும் வெற்றி பெறுவீர்கள். பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். பழைய கடனில் ஒரு பகுதியை பைசல் செய்வீர்கள். பிரியமானவர்களுக்காக சிலவற்றை விட்டுக் கொடுப்பீர்கள்.

**மீனம்**
கோபத்தை கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். பிள்ளைகளின் தேவைகளை பூர்த்தி செய்வீர்கள். சிலர் உங்களை நம்பி பொறுப்புகளை ஒப்படைப்பார்கள். வியாபாரம் தழைக்கும்.

# வடமராட்சி கட்டைக்காடு கிழக்கில் வன்முறை குழு பெரும் அட்டகாசம்

## வீட்டு உடைமைகள், வாகனங்களுக்கு சேதம்

யாழ்ப்பாணம், டிசெ. 23

யாழ்ப்பாணம், வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு கிழக்கு பகுதியில் வன்முறைக்குழு நேற்று முன்தினம் இரவு பெரும் அட்டகாசத்தில் ஈடுபட்டது.

கைக்குழந்தைகளுடன் வீட்டில் தங்கியிருந்த குடும்பத்தினர் மீது கொலைவெறி தாக்குதல் மேற்கொள்ளும் முயற்சியில் இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது

வாள்கள், கத்தி, கற்களுடன் வந்த ஒரு குழுவினால் கட்டைக்காடு கிழக்கு பகுதியில் இந்தத் தாக்குதல் சம்பவம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதலின் போது, உழவியந்திரம், வாகனம் வீட்டின் பொருட்கள், கதவுகள் சேதமாக்கப்பட்டுள்ளன.

இந்த வன்முறைக் குழுவினர் கட்டைக்காடு கிழக்கு பகுதியில் மதுபோதையில் நீண்ட நாட்களாக குடும்பங்களை அச்சுறுத்தி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

பாதிக்கப்பட்ட குடும்பஸ்தர் மருதங்கேணி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.

சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை மருதங்கேணி பொலிஸார் ஆரம்பித்துள்ளதுடன் இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய பலருக்கு எதிராக மருதங்கேணி பொலிஸ் நிலையத்தில் அதிகளவான முறைப்பாடுகள் காணப்படுகின்ற நிலையில், பொலிஸார் இவர்களை கைது செய்ய தயங்குவதாக பாதிக்கப்பட்ட குடும்பஸ்தர் தெரிவித்தார். (எ-05)

# தையிட்டியில் மத தலைவர்கள் அவமதிப்பு: சைவ மகா சபை வன்மையாக கண்டனம்

யாழ்ப்பாணம், டிசெ. 23

தையிட்டியில் சாத்வீகமான முறையில் போராட்டம் நடைபெற்றபோது சைவ சமயத்தலைவர்களில் ஒருவரான நல்லூர் சிவகுரு ஆதீன தவத்திரு வேலன் சுவாமிகள் மிக மோசமான முறையில் கைது செய்யப் பட்டதை சைவ மகா சபை வன்மையாக கண்டித்துள்ளது.

வணக்கத்துக்குரிய மதத்துறவி மீது மிக மோசமான நடத்தையை காண்பித்தமை மிகவும் பாரதூரமான தவறாகும். இலங்கையில் உள்ள அனைத்து மதத் தலைவர்களையும் சமமாக மதிக்க வேண்டிய, சட்டத்தை நிலைநாட்ட வேண்டியவர்கள் ஒரு தலைப்பட்சமாக சட்டரீதியற்ற முறையில் தனியார் காணியில் அடாத்தாக நிறுவப்பட்டுள்ள ஒரு மதக்கட்டடத்துக்காக அதனை எதிர்த்து போராடிய அந்த பிரதேச மதத்தலைவரை தள்ளிச் சென்று வாகனத்தில் ஏற்றி கைது செய்தமையை எமது சமயத்தை அவமதித்த செயலாகவே பார்க்கின்றோம்.

இந்த விடயத்தில் அரசு உடனடியாக பக்கச்சார்பற்ற விசாரணை முன்னடுத்து சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும்.

எதிர்காலத்தில் இவ்வாறான எமது சமயத்தலைவர்களை அவமதிக்கும்செயலை முற்று முழுதாக நிறுத்துவதற்கு உறுதி அளிக்க வேண்டும் என்பதை சைவ சமய மக்கள் சார்பாக அகில இலங்கை சைவ மகா சபையினராகிய நாம் ஆழமாக வலியுறுத்தி நிற்கின்றோம் என்று அந்த சபை விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக் கப்பட்டுள்ளது.

# வவுனியாவில் சந்நிதியான் ஆச்சிரமத்தால் அறநெறி பாடசாலைகளுக்கு பல உதவிகள்

வவுனியா, டிசெ. 23

தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரமத்தால் வவுனியா, செட்டிக்குளம் ஞானப் பிள்ளையார் அறநெறிப் பாடசாலை, சிதம்பரபுரம் திருப்பமுனி அறநெறிப் பாடசாலை, முதலியார்குளம் வேல்முருகன் அறநெறிப் பாடசாலைகளில் கல்வி கற்கும் 146 மாணவர்களுக்கு 2 இலட்சத்து 25, 000 ரூபாய் பெறுமதியான சீருடைகள் வழங்கப்பட்டன.

மேலும், வவுனியா மாவட்டத்தின் 10 அறநெறிப் பாடசாலையில் கல்வி கற்பிக்கும் 30 ஆசிரியர்களுக்கு 150,000 ரூபாய் பெறுமதியான அத்தியாவசிய உலர் உணவுப் பொருட்களும் வழங்கப்பட்டன.



இந்த உதவிகளை சந்நிதியான் ஆச்சிரம முதல்வர், கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள், தொண்டர்களுடன் நேரடியாக சென்று வழங்கினார். (எ)

# வேலன் சுவாமிகள் மருத்துவமனையில் அனுமதி

யாழ்ப்பாணம், டிசெ. 23

சிவகுரு ஆதீன முதல்வரும் பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலான மக்கள் பேரெழுச்சி இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளருமான தவத்திரு வேலன் சுவாமிகள் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் நேற்று முன்தினம் இரவு அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தையிட்டி சட்டவிரோத விகாரைக்கு எதிராக நேற்று முன்தினம் இடம்பெற்ற போராட்டத்தின்போது மதகுரு எனவும் பாராது வேலன் சுவாமிகள் வலுக் கட்டாயமாக பொலிஸாரால் கைது செய்யப்பட்டு கடுமையாக தாக்கப்பட்டிருந்தார்.

நேற்று முன்தினம் மதியம் மல்லாகம் பதில் நீதிவான் முன்னிலையில் பலாலி பொலிஸாரால் முற்படுத்தப்பட்டிருந்த வேளை வேலன் சுவாமிகள் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் அவருக்கு நேற்று முன்தினம் இரவு திடீரென சுகவீனம் ஏற்பட்டுள்ளது.

இதனால், வேலன் சுவாமிகள் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (எ-03)

## யாழில் ஐஸ் போதையுடன் இளைஞன் கைது!

யாழ்ப்பாணம், டிசெ. 23

சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உடுவில் பகுதியில் நேற்று முன்தினம் இரவு ஐஸ் போதைப்பொருளுடன் 23 வயது இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன் போது, அவரிடமிருந்து 5 கிராம் 120 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருள் பறிமுதல் செய்யப்பட்டது.

யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில், சுன்னாகம் பொலிஸாரால் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தனகல்லு ஓயாவில் ஆணின் சடலம் மீட்பு!

கொழும்பு, டிசெ. 23

அத்தனகல்லு ஓயாவில் ஆடைகளற்ற நிலையில் ஆண் ஒருவரின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

அத்தனகல்ல பொலிஸ் நிலையத்துக்கு கிடைக்கப்பெற்ற தகவலையடுத்தே குறித்த சடலம் மீட்கப்பட்டுள்ளது.

உயிரிழந்தவரின் அடையாளம் இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சடலம் வட்டுபிட்டிவல வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# பண்டிகைக் காலத்தில் பாதுகாப்பு அமைதியை பேண விசேட திட்டம்!

கொழும்பு, டிசெ. 23

வரவிருக்கும் பண்டிகைக் காலத்தில் பொதுப் பாதுகாப்பு மற்றும் அமைதியை உறுதி செய்வதற்கும், அமைதியான கொண்டாட்டத்திற்குத் தேவையான சூழரல உருவாக்குவதற்கும் இராணுவத் தலைமையகத்தை மையமாகக் கொண்ட ஒரு செயல்பாட்டு அறையை நிறுவ பாதுகாப்புச் செயலாளர் அறிவுறுத்தியுள்ளார்.

பண்டிகைக் காலம் முடியும் வரை தொடர்ந்து செயல்படும் இந்த செயல்பாட்டு அறை, முப்படைகளுக்கும் இலங்கை பொலிஸாருக்கும் இடையே நெருக்கமான ஒத்துழைப்பை உறுதி செய்யும் முக்கிய ஒருங்கிணைப்பு மையமாகச் செயல்படும்.

பண்டிகைக் காலத்தில் ஏற்படக்கூடிய எந்தவொரு பாதுகாப்பு சவால் அல்லது அவசரநிலைக்கும் உடனடி, ஒழுங்கான மற்றும் உகந்த பதிலை உறுதி செய்வதே இந்த கூட்டு ஒருங்கிணைப்பு பொறிமுறையின் முதன்மை நோக்கமாகும்.

புதுப்பித்த தகவல் பரிமாற்றத்தை வலுப்படுத்தவும், சரியான நேரத்தில் முடிவுகளை எடுக்கவும், அனைத்து பாதுகாப்புப் படைகளின் செயல்பாட்டுத் தயார்நிலையை மேம்படுத்தவும் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த பொறிமுறையின் மூலம், அதிகாரிகள் பொதுமக்களின் உயிர்களைப் பாதுகாக்கவும், அரசு மற்றும் தனியார் சொத்துக்களைப் பாதுகாக்கவும் பண்டிகைக் காலம் முழுவதும் சிறப்பாகச் செயல்பட முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ)

# ஒன்லைன் மோசடிகள் அதிகரிப்பு

கொழும்பு, டிசெ. 23

ஒன்லைனில் பொருட்களை விற்பனை செய்வதாகக் கூறி பல்வேறு நபர்கள் செய்யும் நிதி மோசடிகள் அதிகரித்துள்ளதாக இலங்கை கணினி அவசர தயார் நிலைக் குழு தெரிவித்துள்ளது.

ஒன்லைனில் பொருட்களை கொள்முதல் கட்டளை செய்வதற்கு முன், பொதுமக்கள் சம்பந்தப்பட்ட நிறுவனம் பற்றிய துல்லியமான மற்றும் நம்பகமான தகவல்களை சரிபார்க்க வேண்டும் என்று இலங்கை கணினி அவசர தயார் நிலைக் குழு தலைமை தகவல் பாதுகாப்பு பொறியாளர் நிரோஷ் ஆனந்த குறிப்பிட்டார்.

இதேவேளை, அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிதி உதவி வழங்குவது தொடர்பாக மோசடிகள் இடம்பெற்றுள்ளதாக கடந்த சில நாட்களாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும் அவர் கூறினார்.

எனவே, பண்டிகைக் காலத்தில் ஆன்லைனில் பொருட்களை வாங்கும்போது பொது மக்கள் அவதானத்துடன் இருக்குமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

(அ)

# டித்வா சூறாவளியால் சேதமடைந்த குளங்கள் தற்காலிகமாக சீரமைப்பு

கொழும்பு, டிசெ. 23

டித்வா சூறாவளியால் சேதமடைந்த நாடு முழுவதிலுமுள்ள நீர்ப்பாசன குளங்களுக்கு தற்காலிக சீரமைப்புப் பணிகள் தற்போது தீவிரமாக முன்னெடுக்கப்பட்டுள்ளதாக நீர்ப்பாசன அமைச்சு தெரிவித்துள்ளது

நீண்டகால மறுசீரமைப்புகளை விட, நெல் விவசாயிகளுக்கு உடனடி நீர் விநியோகத்தை உறுதி செய்வதே அரசாங்கத்தின் முதன்மை நோக்கமாக உள்ளது.

நிலம் மற்றும் நீர்ப்பாசனத் துறை துணை அமைச்சர் அரவிந்த செனரத்,

விவசாயத் தேவைகளுக்கான நீரை பாதுகாப்பதே திட்டத்தின் ஆரம்ப கட்டத்தின் முக்கிய இலக்கு என நீர்ப்பாசனத் துறை பிரதி அமைச்சர் அரவிந்த சேனாரத், தெரிவித்துள்ளார்.

இதற்காக நீர்ப்பாசனத் திணைக்களமும் மகாவலி அபிவிருத்தி சபையும் இணைந்து நீர் முகாமைத்துவ நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து செயற்பட்டு வருகின்றன.

பதுளை, திருகோணமலை, அனுராதபுரம் மற்றும் புத்தளம் மாவட்டங்களில் அதிக சேதம் ஏற்பட்டுள்ளதாகவும், சுமார் 92 குளங்களுக்கு தற்காலிக சீரமைப்புப் பணிகள் நிறைவடையும் நிலையில் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், சேதமடைந்துள்ள மீதமுள்ள சுமார் 600 நீர்ப்பாசன அமைப்புகள் அடுத்த கட்டத்தில் சீரமைக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# ரணில் இப்போது பாராளுமன்றுக்கு செல்வது காலத்தின் தேவையாகும்!

## கூறுகிறார் உதய கம்மன்பில



கொழும்பு, டிசெ. 23

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்க்கட் சிகளுக்கு பலமான ஆளுமை யாக உள்ளார்.

தற்போதைய இக்கட்டான நிலையில் அவர் பாராளுமன்றத்துக்கு மீண்டும் செல்வது காலத்தின் தேவையாகும் என்று பிவிதுறு ஹெல உறுமய கட்சியின் தலைவரும்,முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற நிகழ்வின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது-அரசாங்கத்தை புகழ்வது எதிர்க்கட்சிகளின் வேலையில்லை. அதற்கு தான் ஆளுங்கட்சியில் 159 உறுப்பினர்கள் உள்ளார்கள்.

ஆளுங்கட்சியினர் அரசாங்கத்தின் தவறுகளையும் சரி என்று புகழ்வார்கள்.

ஏனெனில் சரி எது, பிழை எது என்று அவர்களால் தன்னிச்சையாக தீர்மானம் எடுக்க முடியாது.

பத்தரமுல்ல கட்சி காரியாலயத்தின் தீர்மா னத்தையே அனைவரும் பின்பற்றுவார் கள்.

அரசாங்கத்தின் குறைகளை சுட்டிக்காட்டி, மக்களுக்கு அவற்றை எடுத்துரைப்பதே எதிர்க்கட்சிகளின் பொறுப்பு. அதனையே நாங்கள் செய்கிறோம்.

அரசாங்கம் சிறந்த முறையில் செயற்பட்டால் அதனை நாங்கள் வரவேற்போம்.

அனைத்தையும் விமர்சிக்கும் மக்கள் விடுதலை முன்னணி யின் மனநிலை எமக்கு இல்லை.

பாராளுமன்ற உறுப்பினர் பைஸர் முஸ்தபா பாராளுமன்ற உறுப்புரிமையை இராஜினாமா செய்வதாகவும், அவ்விடத்துக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நியமிக்கப்படவுள்ளதாகவும் அரசியல் களத்தில் பேசப்படுகிறது.

இது எந்தளவுக்கு உண்மை என்று தெரியானது.

ஏனெனில் நாங்கள் பிறிதொரு கட்சியின் உள்ளக விவகாரங்களில் தலையிடுவதில்லை.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்க்கட்சிகளுக்கு பலமான ஆளுமை யாக உள்ளார்.


தற்போதைய இக்கட்டான நிலையில் அவர் பாராளுமன்றத்துக்கு மீண்டும் செல்வது காலத்தின் தேவையாகும். எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஒரு சிறந்த தலைமைத்துவத்தின் கீழ் பலமாக செயற்பட்டால் மாத்திரமே ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தமுடியும்-என்றார்.

(அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெருகல் பிரதேசத்தில் கடும் வெள்ளப்பெருக்கு



திருகோணமலை, டிசெ. 23

திருகோணமலை, வெருகல் பகுதியில் நேற்று முன்தினம் அதிகாலை வெள்ளம் உட்புகுந்ததில் மூன்று குடும்பங்களைச் சேர்ந்த 10 பேர் உறவினர்கள் வீடுகளில் தங்கவைக்கப்பட்டுள்ளதுடன் மூன்று வீடுகள் வெள்ளத்தில் மூழ்கின.

அண்மையில் மலைநாட்டில் பதிவான அதிக மழைவீழ்ச்சி காரணமாக கடந்த வியாழக்கிழமை மாலை உயர்வடையத் தொடங்கிய மன்னம்பிட்டியின் நீர்மட்டம் வெள்ளிக்கிழமை அதிகாலை 04. 99 மீற்றர் வரை உயர்வடைந்து பின்னர் குறைவடையத் தொடங்கியது. இதன்போது வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில், அங்கிருந்து வெள்ளம் இரண்டு நாட்களுக்கு பின்னர் நேற்று முன்தினம் வெருகல், கங்குவேலி படுகாட்டுப் பகுதியில் பரவி வருகின்றது.

இதனால், வெருகல் கிராம உத்தியோகத்தர் பிரிவுக்குட்பட்ட மாவடிச்சேனை கிராமத்தில் 3 வீடுகளுக்குள் வெள்ளம் உட்புகுந்துள்ளதுடன் பலருடைய வளவுகளுக்குள்ளும் வெள்ளம் பரவியுள்ளது. இதன் காரணமாக 3 குடும்பங்களைச் சேர்ந்த 10 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் இவர்கள் உறவினர்கள் வீடுகளில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். பிரதேச செயலாளர் மற்றும் கிராம உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட அரச உத்தியோகத்தர்கள் களப்பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

அத்துடன் கங்குவேலி படுகாடு மற்றும் கருக்குவயல்பகுதியில் வரம்புகளை மூடி வெள்ளம் பரவி வருகின்றது. எனினும், ஊருக்குள் வெள்ளம் உட்புகுவதற்கான வாய்ப்புகள் இல்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், மன்னம்பிட்டியில் நீர்மட்டம் உயர்வடைந்து பின்னர் தொடர்ச்சியாக குறைவடைந்து வந்ததன் காரணமாக பாரிய வெள்ள ஆபத்து இல்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(எ)

# அம்பாறை, மட்டக்களப்பில் தொடர்ந்து மழை பெய்யும்

கொழும்பு, டிசெ. 23

ஊவா மாகாணத்திலும் அத்துடன் அம்பாறை, மட்டக்களப்பு, மாத்தளை, நுவரெலியா மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களிலும் தொடர்ந்து மழை பெய்யக்கூடுமென வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாட்டின் ஏனைய பிராந்தியங்களில் சீரான வானிலை நிலவக்கூடும்.

மத்திய மலைப் பிரதேசங்களின் கிழக்கு சரிவுகளிலும், வடமேல் மாகாணத்திலும் அத்துடன் அம்பாறை, அம்பாந்தோட்டை மற்றும் மொனராகலை மாவட்டங்களிலும் மணித்தியாலத்துக்கு சுமார் 40 கிலோ மீற்றர் வேகத்தில் அடிக்கடி ஓரளவு பலத்த காற்று வீசக்கூடும்.

மத்திய, சப்ரகமுவ மற்றும் மேல் மாகாணங்களின் சில இடங்களிலும் அத்துடன் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களின் சில இடங்களிலும் அதிகாலை வேளையில் பனிமூட்டம் காணப்படும்.

மட்டக்களப்பு தொடக்கம் அம்பாந்தோட்டை ஊடாக காலி வரையான கரையோரத்துக்கு அப்பால் உள்ள கடல் பிராந்தியங்களின் பல இடங்களில் மழை பெய்யக்கூடும்.

கடல் பிராந்தியங்களில் மணித்தியாலத்துக்கு 30 - 40 கிலோ மீற்றர் வேகத்தில் வடகிழக்குத் திசையில் இருந்து காற்று வீசும்.

வலப்பிட்டிய தொடக்கம் கொழும்பு, புத்தளம் ஊடாக மன்னார் வரையான அத்துடன் மாத்தறை தொடக்கம் அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கரையோரத்துக்கு அப்பால் உள்ள கடல் பிராந்தியங்களில் மணித்தியாலத்துக்கு 50 - 55 கிலோ மீற்றரிலும் கூடிய வேகத்தில் அடிக்கடி காற்று அதிகரித்து வீசக்கூடும். இவ்வாறான சந்தர்ப்பங்களில் இக் கடல் பிராந்தியங்கள் கொந்தளிப்பாகக் காணப்படும்.

நாட்டை சூழவுள்ள ஏனைய கடல் பிராந்தியங்கள் இடைக்கிடையே ஓரளவு கொந்தளிப்பான நிலையில் காணப்படும் என்றும் தெரிவிக்கப்பட் டுள்ளது.

(எ)

# நீர்த்தேக்கங்கள் வான் பாய்ந்தாலும் இப்போது வெள்ள அபாயம் இல்லை

## அம்பாறையில் அதிக மழைவீழ்ச்சி

கொழும்பு, டிசெ. 23

மகாவலி கங்கையை அண்டிய மன்னம்பிட்டி ஆற்றின் நீர்மட்டம் உயர்வான நிலையில் காணப்பட்டாலும், அது வெள்ள நிலையை அடையும் அபாயம் இல்லை என்று நீர்ப்பாசன திணைக்களம் தெரிவித்துள்ளது.

மகாவலி ஆற்றுப் படுக்கையில் உள்ள சில நீர்த்தேக்கங்கள் வான்பாயத் தொடங்கியுள்ளதாக அந்தத் திணைக்களத்தின் பணிப்பாளரும், நீரியல் மற்றும் அனர்த்த முகாமைத்துவ பொறியியலாளருமான எல். எஸ். சூரியபண்டார தெரிவித்தார்.

அத்துடன், அநுராதபுரம் மாவட்டத்தின் தந்திரிகமலை நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் ஓரளவு உயர்வாகக் காணப்பட்டாலும், அநுராதபுரம் மாவட்டத்தில் பல நீர்த்தேக்கங்கள் வான்பாயும் நிலையிலும், சிறிதளவு மழைவீழ்ச்சி நிலவினாலும், அந்த நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் பாரிய அளவில் அதிகரிப்பை வெளிப்படுத்தவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதற்கிடையில், நேற்றுக் காலை 9 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணித்தியாலங்களில் நீர்த்தேக்கங்களை அண்டிய பகுதிகளில் கிடைத்த மழை வீழ்ச்சிக்கு அமைய, அம்பாறை மாவட்டத்திலேயே அதிக மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளதாகவும், அது 25 மில்லி மீற்றர் எனவும் நீர்ப்பாசன பொறியியலாளர் தெரிவித்தார்.

அத்துடன், வளிமண்டலவியல் திணைக்களத்தின் தரவுகளுக்கு அமைய அம்பாறை மாவட்டத்தின் சில இடங்களில் 50 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளதாகவும், ஏனைய பல இடங்களில் சிறிதளவு மழை பெய்துள்ளதாக நீர்ப்பாசன திணைக்களத்தின் அளவீட்டு நிலையங்களுக்கு அறிக்கையிடப் பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும், தற்போது நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கீழுள்ள 36 நீர்த்தேக்கங்கள் தொடர்ந்தும் வான்பாய்ந்து வருகின்ற போதிலும், அந்த நீர்த்தேக்கங்கள் எதுவும் ஆபத்தான நிலையில் வான்பாயவில்லை எனவும் நீர்ப்பாசன பொறியியலாளர் தெரிவித்தார்.

அத்துடன், 52 நடுத்தர அளவிலான நீர்த்தேக்கங்கள் வான்பாய்ந்து வருவதாகவும், அந்த எந்தவொரு நீர்த்தேக்கத்திலும் ஆபத்தான வகையில் வான்பாயவில்லை எனவும் நீர்ப்பாசன பொறியியலாளர் மேலும் தெரிவித்தார்.

(எ)

## கல்முனையில் டெங்கு ஒழிப்பு உதவியாளர்களுக்கு அறிவுறுத்தல்

கல்முனை, டிசெ. 23

அம்பாறை மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக பெய்து வரும் தொடர் மழையை அடுத்து, கல்முனை பிராந்தியத் தில் டெங்கு நோய் பரவலை கட்டுப்படுத்துவதற்கான விசேட வேலைத்திட்டங்களை பிராந்திய தொற்று நோய் தடுப்புப் பிரிவு தீவிரப்படுத்தியுள்ளது.

இதனையடுத்து, டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் தொடர்பில் கள டெங்கு கட்டுப்பாட்டு உதவியாளர்களுக்கான விசேட வழிகாட்டல் மற்றும் ஆலோசனை கூட்டம் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நடைபெற்றது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் திருமதி சகீலா இஸ்ஸடீனின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ், பிராந்திய தொற்று நோய் தடுப்பு பிரிவினால் ஒருங்கிணைப்பு செய்யப்பட்ட இந்தக்கூட்டம் பிரதி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஏ.பி. மசூத் தலைமையில் நடைபெற்றது.

கள டெங்கு கட்டுப்பாட்டு உதவியாளர்கள், கள நடவடிக் கைகளின் போது பின்பற்ற வேண்டிய புதிய நடைமுறை கள் மற்றும் வழிகாட்டல்கள் குறித்து இங்கு விளக்கமளிக்கப்பட்டது.

அத்துடன் டெங்கு நுளம் புகள் பெருகும் இடங்களை அடையாளம் காணுதல், பொதுமக்களுக்கு விழிப்பு ணர்வு வழங்குதல் மற்றும் மழைக்காலங்களில் மேற் கொள்ள வேண்டிய முன்னெச் சரிக்கை நடவடிக்கைகள் குறித்தும் தெளிவுபடுத்தப்பட்டது. (எ)

# சர்வாதிகாரத்தை நோக்கி அரசு செல்வதால் ஆபத்து!

## இம்ரான் எம். பி. தெரிவிப்பு

திருகோணமலை, டிசெ. 23

இந்த அரசாங்கம் சர்வாதிகாரத்தை நோக்கி செல்வது ஆபத்தானது என திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் தெரிவித்தார்.

திருகோணமலையில் ஊடகங்களுக்கு நேற்று கருத்து தெரி வித்த அவர் மேலும் கூறியதாவது,

திருகோணமலை மாவட்ட கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் தொடர்பான உப குழு கூட்டம் திங்கள், செவ்வாய் ஆகிய தினங்களில் ஆளுங்கட்சியின் ரொஷான் அக்மீமன எம். பியால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மாவட்ட மக்கள் பிரதிநிதி என்ற வகையில் எனக்கோ, குகதாசன் எம். பிக்கோ இந்த கூட்டத்துக்கு அழைப்பு இல்லை.

மாவட்டத்தின் உள்ளூராட்சி மன்றங்கள் எதிர்க் கட்சிகளின் வசம் இருப்பதால் உள்ளூராட்சி மன்றத் தவிசாளர்களுக்கும் அழைப்பு இல்லை.

தனியொரு எம். பியால் அதிகாரிகளை வைத்து இந்த கூட்டம் நடைபெறுகின்றது. இதன் மூலம் மக்கள் பிரதிநிதிகள் கலந்து கொண்டு கருத்து சொல்வதற்கான வாய்ப்பை இந்த அரசாங்கம் முடக்கியுள்ளது.

இதன் மூலம் இந்த அரசாங்கம் சர்வாதிகாரத்தை நோக்கி செல்வது தெளிவாகின்றது. இது ஆபத்தான விடயமாகும்.

ஜனநாயகத்தை பாதுகாப்பதாக கூறி ஆட்சிக்கு வந்த இந்த அரசாங்கம் சர்வாதிகாரத்தை நோக்கி செல்வது குறித்து பொதுமக்கள் கவனம் செலுத்த வேண்டும்- என்றார்.

(எ-12)

# திருக்கோவிலில் இளைஞன்மீது பொலிஸார் துப்பாக்கிச் சூடு!

திருக்கோவில், டிசெ. 23

அம்பாறை, திருக்கோவில் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட விநாயகபுரம் பகுதியில் வைத்து 26 வயது இளைஞன் மீது பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளனர்.

பாதிக்கப்பட்ட இளைஞனின் உறவினர்கள், நண்பர்கள் ஊடாக மனித உரிமை செயல்பாட்டாளர் தாமோதரம் பிரதீபனிடம் அறிவிக்கப்பட்டதன் பின்னர் இந்தச் சம்பவம் தற்போது வெளிப்படுத்தப் பட்டுள்ளது.

கடந்த 19ஆம் திகதி மாலை 5 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த இளைஞன் போதைப்பொருள் பாவனை உடையவர் எனவும் சூதாட்டத்தில் ஈடுபடுகிறவர் என்றும் தமக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் அவரைக் கைது செய்ய முற்பட்ட போது கைகலப்பு ஏற்பட்டதாகவும் அந்த இடத்தில் தங்களுடைய துப்பாக்கி தவறுதலாக வெடித்ததாகவும் பொலிஸார் கூறினர்.

இந்த நிலையில், காயமடைந்த இளைஞன் அக்கரைப்பற்று ஆதார மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கும் நிலையில் இது தொடர்பிலே எது வித கருத்துக்களும் வெளிப்படுத்தப்படாமல் இரகசியமாக காணப்பட்ட நிலையில் இப்போது வெளிப்படுத்தப் பட்டிருக்கிறது.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கு ரயில்...

குளிரூட்டப்பட்ட முதலாம் வகுப்பு மற்றும் இரண்டாம் வகுப்பு பெட்டிகளுடன் இயக்கப்படும் என்றும், பயணிகளுக்காக முன்பதிவு செய்யப்பட்ட இருக்கைகள் வழங்கப்படும் என்றும் இலங்கை ரயில்வே தெரிவித்துள்ளது. (அ)

## விகாரைக்கு தேவையான...

ரஜமஹா விகாரையின் விகாராதிபதி கிந்தொட்ட நந்தாராம தேரர்,

திஸ்ஸ விகாரையை அடிப்படையாகக் கொண்டு இன்னும் ஓரிரு மாதங்களுக்கு பின்னர் மீண்டும் பிரச்னை தோற்றம் பெறாத வகையில் தீர்வு காண்பது மிகவும் சிறந்ததாக அமையும். சகல பிரச்னைகளுக்கும் இரண்டு பக்கங்கள் இருக் கும். இந்த பிரச்னைக்கு இரு தரப்பு பேச்சு ஊடாக தீர்வு காணவேண்டும்.

விட்டுக் கொடுப்பது பௌத்த தர்மமாகும். விகாரைக்கு தேவையான காணியை வைத்துக் கொண்டு மிகுதி காணியை கோருபவர்களுக்கு, தமிழ் மக்களுக்கு வழங்கி இந்த பிரச்னைக்கு தீர்வு காண்பது சிறந்ததாக அமையும்.

திஸ்ஸ விகாரையை முன்னிலைப்படுத்தி தொடர்ச்சியான முரண்பாடுகள், பிரச்னைகள் தோற்றம் பெறுவது முறையற்றது. இதற்கு உரிய தலைமைத்துவத்தின் ஊடாக பேச்சுகளை மேற்கொண்டு முரண்பாடற்ற வகையில் தீர்வு காணவேண்டும் - என்றார். (அ)

## புதிய பயங்கரவாத...

இந்த சட்டம் ஜனநாயகத்தையும் அடிப்படை மனித உரிமைகளையும் கடுமையாக கட்டுப்படுத்தும் கட்டமைப்பை கொண்டதாகவும், அதிகாரவாத ஆட்சியை உறுதிப்படுத்தும் நோக்கத்துடன் வடிவமைக்கப்பட்டதாகவும் சங்கம் தெரிவித்துள்ளது.

“அரசு உண்மையிலேயே ஜனநாயகத்தை மதிக்கின்றதாக இருந்தால், இந்த ஜனநாயக விரோத சட்ட முன்மொழிவை உடனடியாக வாபஸ் பெறவேண்டும்,” என அந்த சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இந்த சட்டமூலத்தில் உள்ள பல பிரிவுகள் குறித்து சங்கம் கவலை தெரிவித்துள்ளது. குறிப்பாக, தீவிரவாதம் என்ற சொல்லுக்கான தெளி வற்ற மற்றும் வரையறை, நீதிமன்ற விசாரணை இன் றியே நீண்ட காலம் தடுத்து வைப்பது, மற்றும் சட்ட அமுலாக்கத்தை இராணுவமயமாக்குவது போன்ற அம்சங்கள் குறித்து எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

“இந்தச் சட்டம் கருத்து வெளிப்பாட்டு சுதந்திரம், பேச்சுச் சுதந்திரம் மற்றும் தனியுரிமையை அச்சுறுத்துகிறது. இதன் மூலம் பத்திரிகையாளர்கள், செயற்பாட்டாளர்கள் மற்றும் சிவில் சமூகத்தின் ஜனநாயக மதிப்புகளும் உரிமைகளும் ஆபத்துக்கு உள்ளாகும்,” என்றும் அது கூறியுள்ளது.

ஜனநாயகத்தையும் அடிப்படை மனித உரிமைகளையும் மதிக்கும் அனைத்து நபர்களும் அமைப்புகளும் ஒன்றிணைந்து, இந்த ஆபத்தான சட்ட முன்மொழிவுக்கு எதிராக நிற்கவேண்டும் எனவும் உழைக்கும் ஊடகவியலாளர் சங்கம் வலியுறுத்தியுள்ளது. (அ)

## மண்டைதீவு சர்வதேச...

இத்திட்டம் அமையவுள்ள பகுதியில் கண்டல் தாவரங்கள், கடல் புற்கள், உப்பளங்கள் மற்றும் மண்டைதீவு வனச்சரகம் போன்ற முக்கியமான சூழலியல் மண்டலங்கள் இருப்பதாக ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் இலங்கை வனவிலங்கு மற்றும் இயற்கை பாதுகாப்புச் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

கடலோரப் பாதுகாப்பு மற்றும் கடலோர வள முகாமைத்துவ சட்டத்தின் கீழ் தேவையான எவ்வித சட்டபூர்வ அனுமதிகளையும் சிறீ லங்கா கிரிக்கெட் நிறுவனம் பெறவில்லை என அந்தச் சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

மண்டைதீவு ஒரு இயற்கை வெள்ளத் தடுப்பு வலயமாகும். மழைக்காலங்களில் இப்பகுதி நீரில் மூழ்கும் வாய்ப்புள்ளதால், இங்கு பாரிய கட்டுமானங்களை மேற்கொள்வது நிதி விரயத்துக்கும் தொடர்ச்சியான பராமரிப்பு செலவுகளுக்கும் வழிவகுக்கும். அதிகாரிகளுக்கு தவறான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாக கவலை தெரிவித்துள்ள குறித்த சங்கம், இது இலங்கையின் நிலையான அபிவிருத்திக் கொள்கைக்கு எதிரானது என்றும் கூறியுள்ளது.

“எங்கள் எதிர்ப்பு யாழ்ப்பாணத்தில் விளையாட்டு வசதிகளை மேம்படுத்துவதற்கு எதிரானது அல்ல. மாறாக, சூழலியல் முக்கியத்துவம் வாய்ந்த மண்டைதீவில் இத்திட்டத்தை முன்னெடுப்பதற்கும், சுற்றுச்சூழல் சட்டங்கள் மீறப்படுவதற்கும் மட்டுமே” என இலங்கை வனவிலங்கு மற்றும் இயற்கை பாதுகாப்புச் சங்கம் தெளிவுபடுத்தியுள்ளது. இத்திட்டத்தை உடனடியாக நிறுத்தி இது குறித்து விசாரணை நடத்துமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (அ)

# உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் தனியுரிமைக்கும் பேச்சுரிமைக்கும் எதிர்

கொழும்பு, டிசெ. 23

முன்மொழியப்பட்டுள்ள ”2026 ஆம் ஆண்டின் பயங்கரவாதத்திலிருந்து அரசை பாதுகாப்பதற்கான சட்டம்” குறித்து சமூக ஊடகப் பிரகடனத்திற்கான கூட்டமைப்பு தனது கடும் அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளது.

இந்த புதிய சட்டமூலமானது, நீண்டகாலமாக விமர்சிக்கப்பட்டு வரும் தற்போதைய பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் அடிப்படை அம்சங்களான பரந்த அளவிலான தடுத்து வைப்பு அதிகாரங்கள் மற்றும் தெளிவற்ற பேச்சுரிமை மீதான கட்டுப்பாடுகளைக் கொண்டுள்ளதால் இது பழைய சட்டத்தின் மறுவடிவமாகவே உள்ளதென அந்த அமைப்பு சுட்டிக்காட்டுகிறது.

மனித உரிமைகளை மேம்படுத்துவது போன்ற தோற்றத்தை இது உருவாக்கினாலும், நடைமுறையில் போதிய பாதுகாப்புகள் அற்ற ஒரு மாற்று குற்றவியல் கட்டமைப்பை உருவாக்கி, நீதித்துறையின் மட்டுப்படுத்தப்பட்ட கண்காணிப்புடன் இராணுவம் மற்றும் காவல்துறையின் அதிகாரங்களை விரிவுபடுத்தவே இந்த சட்டம் வழிவகுக்கிறது.

குறிப்பாக, இரகசியத் தகவல்களைப் பரந்த அளவில் வரையறுக்கும் பிரிவு 78 மற்றும் சந்தேகத்திற்குரிய தகவல்களைக் கட்டாயம் அறிவிக்கக் கோரும் பிரிவு 15 ஆகியவை சமூக ஊடகப் பதிவுகளைக் குற்றமாக்குவதுடன், ஊடகவியலாளர்கள் மற்றும் சட்டத்தரணிகள் போன்றோரின் தொழில்சார் இரகசியத் தன்மையையும் கேள்விக்குறியாக்குகின்றன.

மேலும், தனிப்பட்ட தகவல்தொடர்புகளின் மறையீடுகளை (Decryption) உடைக்கும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதால் தனிமனிதச் சுதந்திரம் மற்றும் இரகசியத் தன்மை கடுமையாகப் பாதிக்கப்படும் என்றும், இராணுவ தலையீடு அதிகரிப்பது குறிப்பாகத் தமிழ் சமூகங்களுக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என்றும் சமூக ஊடகப் பிரகடனத்திற்கான கூட்டமைப்பு எச்சரித்துள்ளது.

எனவே, குடிமக்களைக் காப்பதை விடுத்து அரசைக் காப்பதில் கவனம் செலுத்தும் இந்தச் சட்டமூலத்தைத் திரும்பப் பெற்று, சர்வதேச மனித உரிமைத் தரங்களுக்கு அமையப் புதிய சட்டங்களை உருவாக்குமாறு அரசாங்கத்தை அந்த அமைப்பு வலியுறுத்தியுள்ளது. (அ)

## இந்திய வெளிவிவகார...

கொண்டிருக்கும் இலங்கையைப் பேரிடரின் பின் மீட்பதற்கான பெரும் உதவித் திட்டம் ஒன்றை இந்தியாவின் சார்பில் வழங்குவதற்குப் பிரதமர் நரேந்திர மோடி முடிவு செய்திருக்கின்றார் என்றும், அதனைக் கொழும்பில் வைத்து அறிவிக்கவே அவரின் விசேட பிரதிநிதியாக இந்திய வெளிவிவகார அமைச்சர் கொழும்பு வருகிறார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

ஒரு நாள் விஜயமாக கொழும்பு வரும் அவர் இன்று செவ்வாய்க்கிழமை ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவைச் சந்திக்கின்றார்.

அத்துடன் கொழும்பில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பிரதிநிதிகளையும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் பிரதிநிதிகளையும் சேர்த்து ஒன்றாகச் சந்திக்க இருக்கின்றார் என்று தெரிகின்றது. (அ)

## டித்வா புயலால்...

மற்றும் அவற்றுள் இருந்த உடைமைகளுக்குப் பெரும் சேதங்கள் ஏற்பட்டுள்ளன. அத்துடன், நாட்டின் விவசாய நிலங்கள் மற்றும் பயிர்ச்செய்கைகள் இந்தச் சூறாவளியால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

இதேநேரம், மின்சாரம், நீர் வழங்கல் மற்றும் போக்குவரத்து உள்ளிட்ட நாட்டின் முக்கிய உட்கட்டமைப்பு வசதிகளும் சீர்குலைந்துள்ளன.

இது தொடர்பில் உலக வங்கி முன்னெடுத்த மதிப்பீட்டுக்கமைய, இந்த தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி, இந்த சேதம் இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுமார் 4 சதவீதம் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையின் சமீபத்திய வரலாற்றில் மிகவும் தீவிரமான மற்றும் அழிவுகரமான சூறாவளிகளில் ஒன்றான இந்த சூறாவளி, 25 மாவட்டங்களிலும சுமார் 2 மில்லியன் மக்களை கடுமையாக பாதித்துள்ளது. (அ)

## புதிய பயங்கரவாத எதிர்ப்பு...

களையும் அவர்கள் புத் திசாலித்தனமாகப் பரிசீலிப்பார்கள் என எதிர்பார்க்கிறோம்.

இந்தச் சட்டத் தில் நாம் காணும் பிரதான குறைபாடு, இதில், பயங்கரவாதம் என்பது வரையறுக்கப்படவில்லை. பயங்கரவாதம் வரையறுக்கப்படா விட்டால், பயங்கரவாதி என்பவர் யார்? அல்லது பயங்கரவாதச் செயல் என்பது எது? என்பதில் தெளிவற்ற நிலை காணப்படும். முன்னைய காலங்களில் அரசியல் நோக்கங்களுக்காகப் பொதுமக்களைக் கொலை செய்வதையே பயங்கரவாதம் என அழைத்தோம். அவ்வாறு வரையறுக்கப்படாத வரை, அரசாங்கத்திற்கு எதிரான போராட்டங்களை “மக்களை அச்சுறுத்தும் செயல்“ என வரைவிலக்கணப்படுத்தி, மக்களின் சுதந்திரத்தை மிக எளிதாகப் பறிக்க முடியும். கொலை, சித்திரவதை, கடத்தல் போன்ற பல விடயங்கள் ஏற்கனவே எமது தண்டனைச் சட்டக்கோவையில் உள்ளடக்கப்பட்டுள்ளன. அவற்றைத் தாண்டிய விடயங்களையே நாம் இந்தச் சட்டத்தில் எதிர்பார்க்கிறோம்.

அரசாங்கத்திற்கு எதிராகப் போராடுபவர்கள் கிளர்ச்சியாளர்கள், அவர்கள் பொதுமக்களைக் கொல்லமாட்டார்கள். ஆனால் பயங்கரவாதிகள் “அரசுக்கு“ எதிராகப் போரிடுபவர்கள், அவர்களின் இலக்கு அப்பாவிப் பொதுமக்கள். இந்த வித்தியாசம் சட்டத்தில் தெளிவாக இருக்கவேண்டும். இந்தச் சட்டத்தில் அடிப்படைவாதம் குறித்துக் குறிப்பிடப்படவில்லை. அடிப்படைவாதமே தீவிரவா தத்திற்கும், தீவிரவாதம் வன்முறைக்கும், வன்முறை பயங்கரவாதத்திற்கும் இட்டுச் செல்கிறது. எனவே ஆரம்ப நிலையிலேயே அவர்களைக் கண்டறிந்து கைது செய்யும் ஏற்பாடுகள் இதில் இல்லை-என்றார். (அ)

## ஐக்கிய மக்கள் சக்தி...

ஐக்கிய தேசிய கட்சி முன்னெடுக்கும் தீர்மானங்கள் குறித்து பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளராகிய என்னால் பதில் வழங்கமுடியாது. ஐக்கிய தேசியக் கட்சியும் ஐக்கிய மக்கள் சக்தியும் ஒன்றிணைவது என்பது ஆரோக்கியமான விடயமாகும். ஜனநாயக நாட்டில் இவ்வாறானவைகள் இடம்பெறுவது நன்று

கடந்த ஜனாதிபதித் தேர்தல் காலத்தின்போது இந்த இரு கட்சிகளும் இணையவதன் ஊடாக ஜனநாயகத்துக்கும் அவ்விரு கட்சிகளுக்கும் நன்மையான விடயமாக அமையுமென என நினைத்தேன். இன்றும் அதே நிலைப்பாட்டில்தான் இருக்கிறேன்.

இதேபோலதான் சுதந்திரக் கட்சியுடனான வலது சாரி கட்சிகளான பொதுஜன பெரமுன, ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியுடனாவது இணைந்து நாட்டு மக்களின் நலனுக்காக அரசியல் நகர்வுகளை முன்னெ டுத்துச் செல்லவதற்கு நாங்கள் தயாராகவே உள்ளோம். இதுதான் எங்களது அரசியல். அரசியலுக்காக ஒன்றிணைவது என்பது வேறு, இப்போது நாங்கள் அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நியாயமொன்று கிடைக்கவேண்டும் என்பதற்காகவும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவர்களது சொந்த இடங்களில் மறுவாழ்வு அளிக்கும் நடவடிக்கைக்காக எந்தவொரு அரசியல் கட்சியுடனும் இணைந்து பயணிக்க தயாராக உள்ளோம்-என்றார். (அ)

## எம். பியை தாக்கிய...

கைது இடம்பெற்றுள்ளது.

இரத்தினபுரி மாவட்ட தேசிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர், தனது மாமனாரின் நிலத்தில் கஞ்சா பயிரிட்டமை தொடர்பில் சோதனை நடத்தி யதாக கூறப்படும் பொலிஸ் உத்தியோகத்தரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த சம்பவத்தின்போது பொலிஸ் உத்தியோகத்தர் மது அருந்தி இருந்ததாக பொலிஸ் தரப்பில் கூறப்படுகின்றது. (அ)

## சுவிற்சர்லாந்து...

பெற்றோருடன் சுவிற்சர்லாந்துக்கு குடிபெயர்ந்து தாதியர் சேவையில் பட்டமும் பெற்றுள்ளார்.

2021ஆம் ஆண்டு கண்டனுக்கு (மாகாணத்துக்கு) தெரிவானார். தொடர்ந்து, 2023ஆம் ஆண்டு சுவிற்சர்லாந்து பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு, பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவானார். இதன் மூலம் சுவிற்சர்லாந்து பாராளுமன்றத்துக்குத் தெரிவான முதல் இலங்கை வம்சாவளி நபர் என்ற பெருமையைப் பெற்றார். (ஐ)

## ஜெய்சங்கர்...

இந்தியாவின் சார்பில் வழங்குவதற்குப் பிரதமர் நரேந்திர மோடி முடிவு செய்திருக்கின்றார் என்றும், அதனைக் கொழும்பில் வைத்து அறிவிக்கவே அவரின் விசேட பிரதிநிதியாக இந்திய வெளிவிவகார அமைச்சர் கொழும்பு வருகிறார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

ஒரு நாள் விஜயமாக கொழும்பு வரும் அவர்

இன்று செவ்வாய்க்கிழமை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவைச் சந்திக்கின்றார்.

அத்துடன் கொழும்பில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பிரதிநிதிகளையும், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் பிரதிநிதிகளையும் சேர்த்து ஒன்றாகச் சந்திக்க இருக்கின்றார் என்று தெரிகின்றது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு

## ஏற்றுமதி வருவாய் அதிகரிப்பு

கொழும்பு, டிசெ. 23

2025 ஜனவரி முதல் நவம்பர் வரையான காலப்பகுதியில் இலங்கையின் ஏற்றுமதித்துறை 5.8 வீத வருடாந்த வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது.

இலங்கை சுங்கத் திணைக்களத்தின் தரவுகள் மற்றும் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபையால் மதிப்பிடப்பட்ட மாணிக்க மற்றும் ஆபரணங்கள் மற்றும் பெற்றோலிய உற்பத்திகளுக்கான ஏற்றுமதி வருமானத்துடன் இணைந்து மொத்த ஏற்றுமதி வருமானம் 15,776.36 மில்லியன் டொலர்கள் என ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் தலைவரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான மங்கள விஜேசிங்க தெரிவித்தார்.

2025 நவம்பர் மாதத்தில் பொருட்கள் மற்றும் சேவைகள் துறைகளின் மொத்த ஏற்றுமதி வருமானம் 1,364.52 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும். இது 2024 நவம்பர் மாதத்துடன் ஒப்பிடுகையில் 5.56 வீத வருடாந்த வளர்ச்சியாகும்.

இது குறித்து கருத்துத் தெரிவித்த ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் தலைவரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான மங்கள விஜேசிங்க, 2025 ஜனவரி முதல் நவம்பர் வரையான காலப்பகுதியில் இலங்கையின் ஏற்றுமதி வருமானம் 15,776.36 மில்லியன் அமெரிக்க டொலர்களாக அமைந்திருந்தது என்றும், இது வருடாந்தம் ஒரு வலுவான வளர்ச்சியைப் பிரதிபலிக்கிறது என்றும் குறிப்பிட்டார்.

பிரதான சந்தைகள் வழமைக்குத் திரும்புதல், நிலையான உற்பத்தித் திறன் மற்றும் ஏற்றுமதி அபிவிருத்தி மூலோபாயங்களை திறம்பட செயற்படுத்தியமை ஆகியன இலங்கையின் ஏற்றுமதித் துறையின் பலத்தையும் போட்டித்தன்மையையும் உறுதிப்படுத்துகிறது. இந்த வளர்ச்சியானது உலகளாவிய வர்த்தகத்துடன் இலங்கை அதிகமாக ஒன்றிணைவதையும், சந்தை வாய்ப்புகளை பல்வகைப் படுத்தி ஏற்றுமதி போட்டித்தன்மையை பலப்படுத்த முன்னெடுக்கும் தொடர்ச்சியான முயற்சிகளின் வெற்றியையும் எடுத்துக்காட்டுகிறது - என்றார். (அ)

## அரிசி பற்றாக்குறை ஏற்படாது!

கொழும்பு, டிசெ. 23

டித்வா சூறாவளி காரணமாக நாடளாவிய ரீதியில், விவசாயக் காணிகள் சேதமடைந்துள்ளபோதிலும், சந்தையில் அரிசி பற்றாக்குறை ஏற்படாது என அரசாங்கம் அறிவித்துள்ளது.

வர்த்தக மற்றும் உணவுப் பாதுகாப்பு பிரதி அமைச்சர் ஆர்.எம்.ஜயவர்தன ஊடகங்களுக்கு கருத்துரைக்கையில் இந்த விடயத்தைத் தெரிவித்தார்.

அத்துடன், மரக்கறிக்கான பற்றாக்குறை எதிர்வரும் ஒரு சில மாதங்களுக்கு நீடிக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார். சந்தையில் குறிப்பிடத்தக்க உணவுப் பற்றாக்குறை ஏற்படும் என தாம் எதிர்பார்க்கவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

இதனிடையே, இந்த பருவத்தில் சுமார் 80 வீத நெல் நிலங்களில் பயிர்ச்செய்கையை முன்னெடுக்க முடியுமென தாம் நம்பிக்கை கொண்டுள்ளதாகவும் வர்த்தக மற்றும் உணவுப்பாதுகாப்பு பிரதி அமைச்சர் ஆர்.எம். ஜயவர்தன குறிப்பிட்டார். (அ)

## பாதிக்கப்பட்ட 299,513 வீடுகளுக்கு 25,000 ரூபா நிவாரண கொடுப்பனவு

கொழும்பு, டிசெ. 23

"டித்வா" சூறாவளி காரணமாக பாதிக்கப்பட்ட 2 இலட்சத்து 99 ஆயிரத்து 513 வீடுகளுக்கு தலா 25 ஆயிரம் ரூபா நிவாரண கொடுப்பனவு வழங்கப்பட்டுவிட்டது என தேசிய அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது.

மேலும் ஒரு இலட்சத்து 69 ஆயிரத்து 944 வீடுகளுக்கு இன்னும் இந்த நிவாரணத் தொகை வழங்கப்படவேண்டியுள்ளதாக தேசிய அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் உதவி இயக்குநரும் ஊடகப் பேச்சாளருமான எம்.ஏ.ஏ.டி.ஜே.என். முனசிங்க தெரிவித்துள்ளார்.

முழுமையாக சேதமடைந்ததாக அடையாளம் காணப்பட்ட 6 இலட்சத்து 40 ஆயிரத்து 375 வீடுகளில், 4 இலட்சத்து 69 ஆயிரத்து 457 வீடுகளின் உரிமையாளர்கள் தங்கள் வீடுகளை மீள கட்டியெழுப்புவதற்காக வழங்கப்படும் இந்த நிவாரண கொடுப்பனவிற்கு தகுதியானவர்கள் என்றும் அவர் கூறினார்.

இந்த நிவாரணத் திட்டத்திற்காக அரசாங்கம் மொத்தமாக 7 ஆயிரத்து 487 கோடி ரூபாவை செலவிடவுள்ளதாகவும் முனசிங்க உறுதிப்படுத்தினார்.

இதனிடையே, வீட்டு சேதங்களைத் தவிர்ந்த பிற துறைகளில் ஏற்பட்ட பாதிப்புகளுக்கான இழப்பீடுகள் இந்த மாத இறுதிக்குள் முழுமையாக வழங்கப்படும் என தேசிய அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. (அ)

# இலங்கையின் வெளிநாட்டு கடன் மீள செலுத்தலை உடன் நிறுத்துக!

### 120 உலக பொருளாதார நிபுணர்கள் கோரிக்கை

கொழும்பு, டிசெ. 23

இலங்கையை நிலைகுலையச் செய்த "டித்வா" சூறாவளியினால் ஏற்பட்டுள்ள பாரிய அழிவுகளைச் சமாளிக்க, இலங்கையின் வெளிநாட்டுக் கடன் மீள செலுத்தலை உடனடியாக நிறுத்திவைக்குமாறு உலகின் முன்னணி பொருளாதார நிபுணர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நோபல் பரிசு பெற்ற ஜோசப் ஸ்டிக்லிட்ஸ், பிரபல பொருளாதார நிபுணர்களான தோமஸ் பிக் கெட்டி, ஜெயதி கோஷ் மற்றும் "டொனட் எக்கனமிக்ஸ்" புகழ் கேட் ராவொர்த் உள்ளிட்ட 120 சர்வதேச வல்லுநர்கள் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.

600 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதோடு, இலட்சக்கணக்கான வீடுகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் தரைமட்டமாகியுள்ளன. இது இலங்கையின் வரலாற்றில் எதிர்கொள்ளும் மிகப் பெரிய சவாலான இயற்கை அனர்த்தம் என ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே 2022 ஆம் ஆண்டில் வங்குரோத்து நிலையை அடைந்து, கடந்த ஆண்டு 9 பில்லியன் டொலர் கடன் மறுசீரமைப்பு செய்யப்பட்டிருந்தது. இருப்பினும், தற்போதைய சூழலில் அரசாங்க வருமானத்தில் 25 வீத கடனுக்காக செலவிடுவது சாத்தியமற்றது என நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இலங்கை தற்போது கடுமையான பொருளாதார அதிர்ச்சியை எதிர்கொண்டுள்ளது. ஏற்கனவே வரையறுக்கப்பட்ட நிலையில் உள்ள நாட்டின் நிதி இடைவெளியை இந்தச் சூறாவளிப் பேரழிவு முற்றாக விழுங்கிவிடும்.

எனவே, தற்போதைய சூழ்நிலைக்கு ஏற்ப புதிய கடன் மறுசீரமைப்புத் திட்டம் அவசியமானது," என அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இலங்கை அரசாங்கம் ஏற்கனவே சர்வதேச நாணய நிதியத் திடம் 200 மில்லியன் டொலர் அவசர கடனை கோரியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## புதிய கல்வித் திட்டம் சமூகத்தை சீரழிக்கும்

### மல்கம் ரஞ்சித் குற்றச்சாட்டு



கொழும்பு, டிசெ. 23

அரசாங்கத்தின் புதிய கல்விச் சீர்திருத்தங்கள் மற்றும் பாலியல் கல்வி பாடத்திட்டத்துக்குக் கொழும்பு மறை மாவட்ட பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளார்.

ஹங்வெல்ல, பஹத்கம புனித ஜோசப் தேவாலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித் தார்.

புதிய கல்விச் சீர்திருத்தங்கள் பிள்ளைகளை வளர்ப்பதில் பெற்றோருக்கான அடிப்படை உரிமைகளைப் பறிப்பதாக அவர் குற்றம் சுமத்தினார்.

ஆறு வயது முதலே மாணவர்களுக்கு பாலியல் கல்வியை அறிமுகப்படுத்தும் புதிய பாடத்திட்டம், சிறுவர் மனதில் தேவையற்ற மற்றும் "இயல்புக்கு மாறான" விடயங்களைப் புகுத்துவதாக அவர் கவலை தெரிவித்தார்.

பௌத்தம், இந்து, இஸ்லாம் மற்றும் கிறிஸ்தவ விழுமியங்களால் கட்டியெழுப்பப்பட்ட இலங்கையின் கலாசாரக் கட்டமைப்பை இத்தகைய திட்டங்கள் சீர்குலைப்பதாக அவர் குறிப்பிட்டார்.

ஐக்கிய நாடுகள் சபை போன்ற சர்வதேச அமைப்புகளிடமிருந்து நிதி உதவியைப் பெறுவதற்காக, நாட்டின் கலாசார விழுமியங்களை அரசாங்கம் அடகு வைக்கக் கூடாது என அவர் எச்சரித்தார்.

அரசியல் தலைவர்கள் தமக்குரிய எல்லைக்குள் நின்று செயற்படவேண்டும் என்றும், குடும்பம் மற்றும் மத விழுமியங்களுக்கு முரணான விடயங்களில் தலையிடவேண்டாம் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

சிறுவர்களுக்கு மனித உரிமைகள் இருப்பதை ஏற்றுக்கொண்டபோதிலும், அந்த உரிமைகள் அவர் களை பெற்றோருக்கு எதிராகத் திருப்புவதற்கோ அல்லது குடும்பக் கட்டமைப்பைச் சிதைப்பதற்கோ பயன்ப டுத்தப்படக் கூடாது என கர்தினால் வலியுறுத்தினார்.

## அம்பலாங்கொடை துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழப்பு!

கொழும்பு, டிசெ. 23

அம்பலாங்கொடை பகுதியில் நேற்றுக் காலை துப்பாக்கிச் சூட்டு சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இந்த துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. சம்பவம் குறித்து அம்பலாங்கொடை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## வெளிநாட்டு வேலைக்காக சென்றோர் எண்ணிக்கை 3 இலட்சத்தை கடந்தது!

கொழும்பு, டிசெ. 23

இந்த வருடம் வேலைக்காக வெளிநாடு சென்ற இலங்கையர்களின் எண்ணிக்கை 3 இலட்சத்தை விஞ்சியுள்ளதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டு 300,000 இலங்கையர்களை வெளிநாடுகளுக்கு வேலைவாய்ப்புக்காக அனுப்பும் இலக்கை ஏற்கனவே அடைந்துவிட்டதாகவும் பணியகம் சுட்டிக் காட்டியுள்ளது.

கடந்த 10 ஆண்டுகளில் தொழிலாளர்களின் எண்ணிக்கை 300,000 ஐத் தாண்டியது இது மூன்றாவது முறையாகும்.

இதற்கு முன்பு 2024 ஆம் ஆண்டில் 314,673 தொழிலாளர்கள் வேலைக்காக வெளிநாடுகளுக்குச் சென்றனர்.

2025 ஆம் ஆண்டில், 184,085 ஆண் தொழிலாளர்களும் 116,106 பெண் தொழிலாளர்களும் வேலைக்காக வெளிநாடுகளுக்குச் சென்றனர்.

வேலைக்காக வெளிநாடு சென்ற இலங்கையர்களில் அதிக எண்ணிக்கையிலானோர் குவைத்துக்குச் சென்றுள்ளனர் . அவர்களின் எண்ணிக்கை 75,200 ஆகும்.

இரண்டாவது இடத்தில் 57,037 பேர் ஐக்கிய அரபு எமிரேட்ஸ்/க்குச் சென்றுள்ளனர்.

தென் கொரியா, இஸ்ரேல், ருமேனியா, ஐக்கிய இராச்சியம், அவுஸ்திரேலியா மற்றும் ஜப்பான் போன்ற நாடுகளில் கடந்த ஆண்டுகளுடன் ஒப்பிடும்போது, இலங்கையர்கள் வேலைவாய்ப்பு தேடும் போக்கு அதிகரித்து வருவதாகவும் பணியகம் கூறியுள்ளது. (அ)

# இடரில் காணாமற்போனவர்களை தேட வெளிநாட்டு உதவிகள் அவசியமில்லை!

### காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலகம்

கொழும்பு, டிசெ. 23

டித்வா சூறாவளியால் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் மண்சரிவில் சிக்குண்டு காணாமல்போனவர்களைத் தேடும் பணிகளை அரச இயந்திரம் உரியவாறு மேற்கொண்டு வருவதாக காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவ லகம் தெரிவிக்கின்றது.

இந்த நிலையில், இயற்கை அனர்த்தத்தால் காணாமல்போனவர்களை தேடும் பணிகளுக்கு சர்வதேச ரீதியில் நிபுணத்துவம் கொண்டவர்களை அழைப்பதற்கான எவ்வித தேவையும் இல்லை என, காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலகத்தின் தலைவர் மகேஸ் கட்டுலந்த தெரிவித்தார்.

எனினும், காணாமல் போனோரைத் தேடுவதற்கு சர்வதேச நிபுணத்துவத்தைப் பெற்றுக் கொள்ளவேண்டும் என அலுவலக உத்தியோகத்தர் ஒருவரை மேற்கோள் காட்டி வெளியாகியுள்ள தகவல்கள், காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலகத்துக்கு பொருத்தமற்றவை எனவும் அவர் கூறியுள்ளார்.

தமது அலுவலகத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு மாத்திரமே இயலுமை உள்ளதாகவும் மகேஸ் கட்டுலந்த குறிப்பிட்டார். எனவே நாடு கடினமான நிலையில் செயற்பட்டுக் கொண் டிருக்கும்போது, தமது தனிப்பட்ட அபிப்பிராயங்களை வெளியிடுவது பொருத்தமற்ற செயல் எனவும் அவர் கூறினார்.

எவ்வாறாயினும் தற்போதைய நிலையில் அரசாங்கத்துக்கு தேவையான அனைத்து உதவிகளையும் வழங்குவதற்கு தமது அலுவலகம் தயாராக உள்ளதாகவும், காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலகத்தின் தலைவர் மகேஸ் கட்டுலந்த சுட்டிக்காட்டினார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 23.12.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org